நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்
dinakani2023@gmail.com
www.dhinakani.com
மலர் : 02 இதழ் :206 4 - பக்கம் 22.02.2025 சனிக்கிழமை விலை ரூ.6



தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066



KANI GYM
CALL:9894808044





இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து.

விளக்கம்:

வறுமையின் காரணமாக ஒருவன் தீய செயல்களில் ஈடுபடக்கூடாது; அப்படி ஈடுபட்டால் மீண்டும் அவன் வறுமையிலேயே வாட வேண்டியிருக்கும்.

## பாரத மொழிகளை ஏற்பது நம் அனைவரின் பொறுப்பு; மொழிகள் இடையே எந்த பகையும் கிடையாது: பிரதமர் மோடி



புதுடெல்லி: மொழிகளுக்கு இடையே பகைமை கிடையாது. ஒரு மொழி, மற்றொரு மொழியை செழுமைப்படுத்துகிறது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். டெல்லியில் 98-வது அகில இந்திய மராத்தி இலக்கிய மாநாடு நேற்று தொடங்கியது. மாநாட்டை தொடங்கி வைத்து பிரதமர் மோடி பேசியதாவது: பாரதத்தில் பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன. மொழி என்பது தாய் போன்றது. அந்த தாய் (மொழி) தனது குழந்தைகளுக்கு அறிவை போதிக்கிறாள். ஒரு தாய் தனது குழந்தைகளிடம் பாரபட்சம் பார்ப்பது இல்லை. அனைத்து குழந்தைகளையும் அவள் சமமாக பாவிக்கிறாள். இதேபோல, மொழியும் யாரையும் வேறுபடுத்தி பார்ப்பது இல்லை. மொழி என்பது அனைத்து கருத்துகளையும் ஆதரிக்கிறது. சம்ஸ்கிருதத்தில் இருந்து மராத்தி பிறந்தது. எனினும், பிராகிருத மொழியும் மராத்தி மொழியின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கை வழங்கியிருக்கிறது. மொழிகளுக்கு இடையே பகைமை கிடையாது. ஒரு மொழி, மற்ற மொழியை செழுமைப்படுத்துகிறது. மொழியின் பெயரால் பிரிவினையை தூண்ட முயற்சி மேற்கொள்ளப்படும்போது, நமது மொழிகளுக்கு இடையிலான பிணைப்பு சரியான பதிலை அளிக்கிறது. பாரதத்தின் மொழிகளை செழுமைப்படுத்துவது, அவற்றை ஏற்றுக் கொள்வது நமது அனைவரின் பொறுப்பு ஆகும். பாரதத்தின் அனைத்து மொழிகளையும் பிரதான மொழிகளாகவே கருதுகிறோம். மராத்தி உட்பட அனைத்து தாய்மொழிகளிலும் கல்வி கற்பிக்கப்படுவதை ஊக்குவிக்கிறோம். இதன்காரணமாக இப்போது மராத்தி மொழியிலேயே பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட உயர் கல்வியை கற்க முடிகிறது. ஒரு காலத்தில் ஆங்கிலம் தெரியவில்லை என்பதற்காக பலரது திறமைகளுக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை. அந்த நிலை தற்போது மாறியிருக்கிறது. நமது இலக்கியங்கள் நமது சமுதாயத்தை பிரதிபலிக்கும் கண்ணாடி போன்றவை. அவை சமுதாயத்துக்கு வழிகாட்டியாக திகழ்கின்றன. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

## சம்பல் கலவரத்தை நடத்த ஐக்கிய அரபு அமீரகத்தில் சதி: 4,400 பக்க குற்றப்பத்திரிகையில் திடுக்கிடும் தகவல்



பரேலி: சம்பல் பகுதியில் கலவரம் ஏற் படுத்த ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து சதி செய்துள்ளனர் என்று சிறப்பு விசாரணை குழு தாக்கல் செய்துள்ள 4,400 பக்க குற்றப்பத்திரிகையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. உத்தர பிரதேச மாநிலம் சம்பல் பகுதியில் முகலாயர் காலத்தில் கட்டப்பட்டதாக கூறப்படும் ஷாஹி ஜமா மசூதி, கோயிலை இடித்துவிட்டு கட்டப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டது. இதுதொடர்பான வழக்கில், மசூதியில் ஆய்வு நடத்த இந்திய தொல்லியல் துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து மசூதியில் தொல்லியல் துறையினர் ஆய்வு நடத்தினர். இரண்டாவது கட்டமாக கடந்த ஆண்டு நவம்பர் 24-ம் தேதி தொல்லியல் துறையினர் ஆய்வு நடத்த சென்ற போது பெரும் கலவரம் ஏற்பட்டது. அப்போது ஏற்பட்ட கலவரத்தில் அடையாளம் தெரியாத மர்மநபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 5 பேர் உயிரிழந் தனர். இந்நிலையில், கூடுதல் தலைமை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நீதிபதி அர்ச்சனா சிங்கிடம் 4,400 பக்க குற்றப்பத்திரிகையை, போலீஸ் அதிகாரி குல்தீப் குமார் மற்றும் மாவட்ட அரசு வழக்கறிஞர் ஹரி ஓம் பிரகாஷ் ஆகியோர் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்தனர். அதில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் 79 பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அவர்கள் அனைவரும் தற்போது சிறையில் உள்ளனர். இதுகுறித்து சம்பல் போலீஸ் எஸ்.பி. கிருஷ்ண குமார் பிஸ்னோய் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: சம்பல் பகுதியில் கலவரம் நடைபெற்ற இடத்தில் இருந்து துப்பாக்கி தோட்டாக்கள் பறி முதல் செய்யப்பட்டன. அவை பாகிஸ்தான் மற்றும் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டவை. ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள, ஷாரிக் சதா என்பவர்தான் இந்த கலவரத்தை தூண்டிவிட்டுள்ளது தெரிய வந்துள்ளது. சம்பல் பகுதியை சேர்ந்த ஷாரிக், கார்களை திருடும் தாதா கும்பலை சேர்ந்தவர். டெல்லி - என்சிஆர் பகுதியில் மட்டும் இவர் 300-க்கும் மேற்பட்ட கார் திருட்டில் சம்பந்தப்பட்டுள்ளார். தாவூத் இப்ராகிம் கும்பலுடனும் பாகிஸ்தானின் ஐஎஸ்ஐயுடனும் அவருக்கு தொடர்பு உள்ளது. ஒரு கட்டத்தில் போலி பாஸ்போர்ட் மூலம் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு தப்பியோடியுள்ளார். அங்கிருந்து சம்பல் கலவ ரத்துக்கு சதி திட்டம் தீட்டியதற் கான ஆதாரங்களை சேகரித்துள்ளோம். ஷாரிக் கும்பலை சேர்ந்தவர்கள்தான் சம்பல் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தி உள்ளனர். அதன் அடிப்படையில் தற்போது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் சமாஜ்வாதி கட்சி எம்.பி. ஜியாவுர்ரகுமான் பார்க், உள்ளூர் எம்எல்ஏ இக்பால் மொகமூதின் மகன் சுஹைல் இக்பால் ஆகியோருடன் ஷாரிக்குக்கு நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அதனால், அவர்களுடைய பெயர்களும் குற்றப்பத்திரிகையில் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு போலீஸ் எஸ்.பி. கிருஷ்ண குமார் பிஸ்னோய் கூறினார்.

# தமிழகத்தின் முன்னேற்றத்தை தடுக்க முயற்சி: மத்திய அரசு மீது முதல்வர் ஸ்டாலின் குற்றச்சாட்டு



இந்தியை: பிப்-22 இந்தியை வளர்ப்பதே தேசிய கல்வி கொள்கையின் நோக்கம்: தமிழகத்தின் முன்னேற்றத்தை தடுக்க முயற்சி: மத்திய அரசு மீது முதல்வர் ஸ்டாலின் குற்றச்சாட்டு கடலூர்: இந்தியை வளர்க்கவே தேசிய கல்விக் கொள்கையை மத்திய அரசு கொண்டு வந்துள்ளதாக முதல்வர் ஸ்டாலின் குற்றம்சாட்டினார். தமிழகத்தின் முன்னேற்றத்தை தடுக்க முயற்சி நடப்பதாகவும் கூறினார். நான் இருக்கும் வரை, தமிழகத்துக்கு எதிரான எந்த ஒரு திட்டத்தையும் ஒருபோதும் கொண்டுவர முடியாது என்று உறுதிபட தெரிவித்தார். கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற விழாவில், ரூ.705 கோடி செலவில் 602 முடிவுற்ற பணிகளை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். ரூ.384 கோடி மதிப்பீட்டில் 178 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். ரூ.387 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 44,689 பயனாளிகளுக்கு வழங்கினார். விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: திட்டங்களை அறிவிப்பதோடு விட்டுவிடாமல், மக்களின் இதயம் வரை சென்று சேர்க்கும் அரசாக இந்த அரசு செயல்பட்டு வருகிறது. கொள்கை லட்சியத்தோடு செயல்படுவதுதான் 'திராவிட மாடல்' ஆட்சி. பெண்களுக்கு உரிமைத் தொகை வழங்கப்படுகிறது. இதை, 'அண்ணனின் சீதனம்' என்று பெண்கள் கூறுகின்றனர். கல்வியில் பெண்கள், பாதியில் நின்றுவிட கூடாது என்பதற்காக பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. நாட்டின் முன்மாதிரி ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சி நடைபெற்று வருகிறது. மத்திய அரசு ஜிஎஸ்டி நிதியை எடுத்துக்கொண்டு, அந்த நிதியை தர மறுக்கிறது. புதிய திட்டங்களை அறிவிப்பதில்லை. திட்ட நிதிகளையும் தர மறுக்கிறது. அதையும் தாண்டி திராவிட அரசு உயர்ந்து நிற்கிறது. அதுதான் அவர்களுக்கு கண்ணை உறுத்துகிறது. 100 ஆண்டுகளுக்கு முன்பே கல்விச் சாலைகளை அமைத்து, எந்த பாகுபாடும் இல்லாமல் அனைத்து சமூக மக்களும் கல்வி கற்க பாடுபட்ட, அடித்தளம் அமைத்த இயக்கம் திராவிட இயக்கம். இந்த நிலையில், தேசிய கல்விக் கொள்கை என உருவாக்கி நம்மை உருக்குலைக்கப் பார்க்கின்றனர். தமிழகத்தின் முன்னேற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. தமிழகத்தில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வழங்க வேண்டிய ரூ.2,152 கோடியை தர மறுக்கிறது. இதை தர வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதல்வர் என்ற முறையில் கடிதம் எழுதியுள்ளேன். அதற்கு மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், 'கல்வியில் அரசியல் செய்யாதீர்கள்' என்று பதில் அளித்துள்ளார். அரசியல் செய்வது நீங்களா, நாங்களா? மும்மொழி கொள்கையை திணிப்பது அரசியல் இல்லையா? பல மொழி பேசும் இந்தியாவில் ஒரு மொழி கொள்கை என்பது அரசியல் இல்லையா? ஒரு திட்டத்துக்கான நிதியை வழங்குவதற்கு நிபந்தனை விதித்து நிர்ப்பந்திப்பது அரசியல் இல்லையா? அரசு நிதியை மக்கள் திட்டத்துக்கு செலவு செய்வது திமுக அரசு. ஆனால், மத்திய அரசு இந்தி திணிப்புக்கு நிதியை செலவு செய்கிறது. கல்வியை வளர்க்க தேசிய கல்விக் கொள்கையை கொண்டு வரவில்லை. இந்தியை வளர்க்க கொண்டு வந்துள்ளனர். நேரடியாக கொண்டு வந்தால் எதிர்ப்பார்கள் என்பதால் முலாம் பூசி கொண்டு வருகின்றனர். 'தாய் மொழியை வளர்க்கத்தான்' என்று மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறுகிறார். நீங்கள் வந்து வளர்க்க, தமிழ் மொழி கையேந்தி நிற்கவில்லை. 'தேன்கூட்டில் கல் எறிய வேண்டாம்' - மத்திய அரசை கடுமையாக எச்சரிக்கிறேன். தேன்கூட்டில் கல் எறிய வேண்டாம். தமிழக மக்களின் தனித்துவமான குணத்தை பார்க்க வேண்டும் என்று மறுபடியும் ஆசைப்படாதீர்கள். நான் இருக்கும் வரை, திமுக இருக்கும் வரை, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கும் வரை, தமிழகத்துக்கும், தமிழக மக்களுக்கும் எதிராக எந்த திட்டத்தையும் ஒருபோதும் கொண்டு வர முடியாது. மக்கள் முன்னேற்றம் ஒரு பக்கம், அதற்கான தடைகளை உடைப்பது மறுபக்கம் என இருபாதை பாய்ச்சலை இந்த அரசு முன்னெடுத்து வருகிறது. இந்த தடைகள் புதிதல்ல. மக்களுக்கு ஆதரவான வெற்றி பாதையில் என்றென்றும் பயணம் தொடரும். இவ்வாறு முதல்வர் பேசினார்.

## சித்த மருத்துவப் பல்கலை. குறித்த சட்ட மசோதா நிறைவேற்றி மீண்டும் ஆளுநருக்கு அனுப்பப்படும்: அமைச்சர் மா.சுப்பிரமணியன்




சென்னை :பிப்-22 சட்டப்பேரவை கூட்டத்தொடரில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சட்ட மசோதா நிறைவேற்றி மீண்டும் ஆளுநருக்கு அனுப்பப்படும் என்று சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். சென்னை கிண்டியில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் 'பொது சுகாதாரத்தில் சித்த மருத்துவத்தின் பங்கு - 2025' என்ற தலைப்பில் சர்வதேச சித்த மருத்துவ மாநாடு நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், 278 ஆராய்ச்சிக் கட்டுரை தொகுப்பு கொண்ட 'அகத்தியம் 2025' என்ற நூலை வெளியிட்டார். பல்கலைக்கழக துணைவேந்தர் மருத்துவர் கி.நாராயணசாமி, பதிவாளர் மருத்துவர் க.சிவசங்கீதா, இந்திய ஆயுஸ் அமைச்சகத்தின் ஆயுர்வேத ஆலோசகர் மருத்துவர் கவுஸ்துபா உபத்யாயா, சித்த மருத்துவத் துறை தலைவர் மருத்துவர் என். கபிலன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர். தமிழகத்திலுள்ள 16 சித்த மருத்துவக் கல்லூரிகளின் சித்த மருத்துவ பேராசிரியர்கள், மருத்துவ மாணவர்கள் மற்றும் கேரளாவில் இருந்து சாந்திகிரி சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவ மாணவர்கள் பங்கேற்றனர். இலங்கையில் இருந்து 2 பேராசிரியர்கள் நேரடியாகவும், 3 பேராசிரியர்கள் காணொலி காட்சி மூலமாகவும் பங்கேற்று சிறப்புரையாற்றினர். இம்மாநாட்டில், அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேசியதாவது: தமிழகத்தில் 3 அரசு மற்றும் 13 தனியார் என மொத்தம் 16 சித்த மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும், 3,800-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்றனர். இந்த ஆட்சி பொறுப்பேற்றபின், சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆளுநர் ஒப்புதல் அளித்திருந்தால் பல்கலை. செயல்பாட்டில் இருந்திருக்கும். ஆனால், அவர் ஒப்புதல் அளிக்கவில்லை. வரும் சட்டப்பேரவை கூட்டத்தொடரில், சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு, மீண்டும் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்படும். விதிப்படி, இரண்டாவது முறை அனுப்பினால், அதற்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும். விரைவில் தமிழகத்தில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் செயல்படத் தொடங்கும். திமுக அரசு ஆட்சிக்கு வந்தபின், சித்த மருத்துவத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. நாமக்கலில், சித்த மருத்துவக் கல்லூரி விரைவில் அமைக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## மாணவனிடம் பாலியல் அத்து மீறியதாக பொய் புகார்: கைதான ஆசிரியரை விடுவிக்க வேண்டும் - காவல் ஆணையரிடம் பள்ளி மாணவர்கள் மனு




சென்னை: பிப்-22 மாணவனிடம் பாலியல் அத்து மீறலில் ஈடுபட்டதாக பொய் புகாரில் கைது செய்யப்பட்ட தமிழ் ஆசிரியரை விடுவிக்க வேண்டும் என பள்ளி மாணவ, மாணவிகள் காவல் ஆணையரிடம் திரண்டு மனு அளித்தனர். சென்னை அசோக்நகரில் உள்ள பிரபலமான தனியார் பள்ளியில் 9-ம் வகுப்பு படித்த மாணவனிடம் பாலியல் அத்து மீறலில் ஈடுபட்டதாக அப்பள்ளி தமிழ் ஆசிரியர் சுதாகர் (43) அண்மையில் கைது செய்யப்பட்டார். முன்னதாக அவர் மீது சைதாப்பேட்டை அனைத்து மகளிர் போலீஸார் போக்சோ உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிந்து சிறையில் அடைத்தனர். இந்நிலையில், தமிழ் ஆசிரியருக்கு ஆதரவாகவும், அவர் பொய் புகாரில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறி சம்பந்தப்பட்ட பள்ளி மாணவ, மாணவிகள் நேற்று காலை காவல் ஆணையர் அலுவலகம் முன் திரண்டனர். பின்னர், காவல் ஆணையரை சந்தித்து மனு அளித்தனர். இதுகுறித்து மாணவர்கள் கூறுகையில், கடந்த ஜனவரி 2-ம் தேதி சம்பந்தப்பட்ட மாணவன் வீட்டுப்பாடம் முடிக்கவில்லை. இதனால், கோபம் அடைந்த தமிழ் ஆசிரியர் சுதாகர், மாணவன் முதுகில் அடித்துள்ளார். ஆசிரியருக்கு கொலை மிரட்டல்: மேலும், தொடையில் கிள்ளவும் செய்துள்ளார். ஜனவரி 3-ம் தேதி பள்ளிக்கு மாணவனின் தந்தை மதுபோதையில் வந்து ஆசிரியர் மீது தாக்குதல் நடத்தி கொலை மிரட்டல் விடுத்தார். இதுஒருபுறம் இருக்க பள்ளி விதியின்படி மாணவர்களை அடிக்க கூடாது என்ற காரணத்தால் ஆசிரியரை பள்ளி நிர்வாகம் பணிநீக்கம் செய்து உத்தரவிட்டது. மேலும், மாணவனின் தந்தை பள்ளி நிர்வாகத்திடமும், ஆசிரியரிடமும் பணம் கேட்டு மிரட்டல் விடுத்தார். பணம் தர மறுத்ததைத் தொடர்ந்து மகனிடம் பாலியல் அத்து மீறலில் ஈடுபட்டதாக தமிழ் ஆசிரியர் மீது பொய் புகார் அளித்துள்ளார். அதன் அடிப்படையில் போலீஸார் ஆசிரியரை கைது செய்துள்ளனர். எனவே, ஆசிரியர் மீது பொய் புகாரின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்திருப்பதை திரும்ப பெற வேண்டும். இவ்வாறு மாணவர்கள் தெரிவித்தனர்.

# ரூ.14.15 கோடி மதிப்பில் பரங்கிமலை ரெயில் நிலையத்தை மேம்படுத்தும் பணி தீவிரம்

சென்னை, பிப்.22

சென்னை கடற்கரை தாம்பரம் வழித்தடத்தில் உள்ளபரங்கிமலைரெயில் நிலையம் சென்னையின் முக்கிய போக்குவரத்து மையமாக உருவாகி வருகிறது. சென்னையின் மெட்ரோ போக்குவரத்தும், மின்சார ரெயில் போக்குவரத்தும் சந்திக்கும் பகுதியாக உள்ளது.

மேற்கொண்டு மாதவரம் சோழிங்கநல்லூர் மெட்ரோ வழித்தடம் பரங்கிமலை வழியாக செல்கிறது. தற்போது விரிவாக்க பணியில் உள்ள பறக்கும் ரெயில் வழித்தடமும் பரங்கிமலையில் சந்திக்கிறது. இதனால் சாலை, ரெயில், மெட்ரோ ரெயில் போக்குவரத்தை இணைக்கும் போக்குவரத்து மையமாக பரங்கிமலை அமைய உள்ளது. ஒரு நாளைக்கு சராசரியாக 25 ஆயிரம் பயணிகள் பரங்கிமலை ரெயில் நிலையத்தை பயன்படுத்தி வருகின்றனர்.




இந்தநிலையில் பரங்கிமலை ரெயில் நிலையத்தை சர்வதேச தரத்தில் மேம்படுத்தும் பணி ரூ.14.15 கோடி மதிப்பில் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதில் ரெயில் நிலையத்தின் இருபுற வாயில்களும் விரிவாக்கப்படுகின்றன. மேலும், புதிய பயணச்சீட்டு மையம், நடைமேடையில் கூடுதல் பயணிகள் இருக்கை, கூடுதல் வாகன நிறுத்தும் வசதி, பயணிகள் தகவல் தெரிவிக்கும் வகையில் எண்ம (டிஜிட்டல்) பலகை உள்ளிட்டவை அமைக்கப்பட்டு வருகிறது.

தற்போது பெரும்பாலான பணிகள் நிறைவடைந்த நிலையில், வரும் மார்ச்மாதத்துக்குள்முழுப் பணியும் நிறைவடையும். இதன் மூலம் சென்னை நகரின் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணப்படும் என தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.

# சென்னை பத்மாவதி தாயார் கோவிலில் பிரம்மோற்சவம் சிம்ம வாகன சேவை

சென்னை பிப்.22

திருப்பதியில் இருப்பது போல் சென்னைதி.நகரில் பத்மாவதிதாயார்கோவில் உள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்தில் உள்ள இக்கோவிலில் வருடாந்திர பிரம்மோற்சவ விழா வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. விழா நாட்களில்தினமும்வாகன சேவை நடைபெறுகிறது. அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் தாயார் எழுந்தருளி அருள்பாலித்துவருகிறார்.

அவ்வகையில் நேற்று இரவு சிம்ம வாகனத்தில் யோக நரசிம்மர் அலங்காரத்தில் தாயார் எழுந்தருளி அருள்பாலித்தார். இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தாயாரை தரிசனம் செய்தனர்.

இன்று கல்பவிருட்ச வாகனத்தில் தாயார் எழுந்தருள்கிறார். கடந்த 16ம் தேதி தொடங்கிய பிரம்மோற்சவ விழா 26ம் தேதி வரை நடைபெறுகிறது.

# திருப்பூரில் மூவர் கொலை விவகாரம்; வதந்திகளை நம்ப வேண்டாம்: காவல்துறை விளக்கம்

திருப்பூர்,பிப்.22

திருப்பூர் மாவட்டம் அவிநாசிபாளையம் அருகே சேமலை கவுண்டம்பாளையம் பகுதியில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் வெட்டி படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் குறவர் இனத்தை சேர்ந்த சிலரை போலீசார் துப்பாக்கியை காட்டி மிரட்டியும், பணம் தருவதாகவும் கூறி குற்றத்தை ஒப்புக் கொள்ளுமாறு சித்ரவதை செய்வதாக புகார்கள் எழுந்தன. இது தொடர்பாக மாவட்ட கலெக்டரிடம் புகார் மனு அளிக்கப்பட்டிருந்தது.



இந்நிலையில், இந்த குற்றச்சாட்டுகளுக்கு திருப்பூர் மாவட்ட காவல் துறை மறுப்பு தெரிவித்துள்ளது. உரிய ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் அடிப்படையில்தான் விசாரணை நடைபெறுகிறது என்றும், வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் காவல்துறை தரப்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

# கரூர்: மின்மோட்டாரை சரி செய்தபோது மின்சாரம் பாய்ந்து 2 தொழிலாளர்கள் உயிரிழப்பு

கரூர், பிப்.22

கரூர் மாவட்டம், க.பரமத்தி அருகே முன்னூர் ஊராட்சிக்குட்பட்ட கிரசர் மேடு என்ற பகுதியில் அரசு புறம்போக்கு நிலத்தில் ஆழ்துளை கிணற்றில் உள்ள மின்மோட்டார் பழுதானது. இதையடுத்து அதனை சரி செய்வதற்காக ஒரு வாகனத்தில் முன்னூரை சேர்ந்த பாலசுப்பிரமணி (44 வயது), ஆரியூர் ஊராட்சி, நிமிந்தப்பட்டி கிராமத்தை சேர்ந்த சதீஷ் (30 வயது) ஆகியோர் அங்கு வந்தனர். பின்னர் கிணற்றில் இருந்த மின் மோட்டாரை வாகனத்தில் உள்ள எந்திரத்தின் உதவியுடன் மேலே தூக்கினர்.

பின்னர் மின்மோட்டாரை சரி செய்து அதனை எந்திரத்தின் உதவியுடன் கிணற்றில் இறக்கிக் கொண்டிருந்தனர். அப்போது மேலே சென்ற மின்கம்பியில், எந்திரத்தில் பொருத்தப்பட்டிருந்த பெரிய குழாய் எதிர்பாராதவிதமாக உரசியது. இதனால் எந்திரம் முழுவதும் மின்சாரம் பாய்ந்துள்ளது. அப்போது அங்கு வேலை செய்து கொண்டிருந்த சதீஷ், பாலசுப்பிரமணி மீதும் மின்சாரம் பாய்ந்து தூக்கி வீசப்பட்டனர். இதனால் 2 பேரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தனர்.

இதைக்கண்ட அப்பகுதி பொதுமக்கள் க.பரமத்தி போலீசாருக்கும், மின்சார வாரியத்திற்கும் தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் போலீசார் மற்றும் மின்சார வாரியத்தினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர். பின்னர் இறந்து கிடந்த பாலசுப்பிரமணி, சதீஷ் ஆகியோரின் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆம்புலன்ஸ் மூலம் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்து குறித்து க.பரமத்தி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இறந்த பாலசுப்பிரமணிக்கு திருமணமாகி மனைவி மற்றும் 3 குழந்தைகள் உள்ளனர். சதீசுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. மின்சாரம் பாய்ந்து 2 தொழிலாளர்கள் உயிரிழந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# பெண்ணிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட அரசு பேருந்து ஓட்டுநர், நடத்துநர் பணியிடை நீக்கம்

செங்கல்பட்டு, பிப்.22

செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கடந்த 16ஆம் தேதி, பனையூர் சுங்கச்சாவடியில் சென்னையிலிருந்து சிதம்பரம் நோக்கி செல்லும் அரசுப் பேருந்தில் ஏற முயன்றுள்ளார். ஆனால், பேருந்து அங்கு நிற்காததால் பேருந்தை வழிமறித்து கேட்டதற்கு ஓட்டுநரும் நடத்துனரும் அந்தப் பெண்ணை தகாத வார்த்தைகளால் திட்டியதாக கூறப்படுகிறது.




இது குறித்த வீடியோ காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், ஓட்டுநர் மற்றும் நடத்துநரை பணியிடை நீக்கம் செய்து போக்குவரத்துத்துறை உத்தரவிட்டுள்ளது.

# ரெயிலில் இருந்து தவறி விழுந்த ஸ்டேஷன் மாஸ்டர்: பணி செய்யும் நிலையத்திலேயே உயிரிழந்த சோகம்

திருமங்கலம், பிப்.22

கேரள மாநிலத்தை சேர்ந்தஅனுசேகர், மதுரை மாவட்டம் கள்ளிக்குடி ரெயில்வே ஸ்டேஷன் மாஸ்டராக பணிபுரிந்து வருகிறார். 32 வயதாகும் இவருக்கு திருமணமாகி 4 மாத கைக்குழந்தை உள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு கள்ளிக்குடி ரெயில் நிலையத்தில் ஸ்டேஷன் மாஸ்டராக நியமிக்கப்பட்டவர். அப்பகுதியிலேயே வாடகை வீட்டில் வசித்தபடி வேலைக்கு சென்று வந்தார். குடும்பத்தினரை பார்க்க அவ்வப்போது சொந்த ஊருக்கும் சென்றும் வந்தார்.



இந்நிலையில் நேற்று மதியம் 12 மணிக்கு அவருக்கு பணி நேரம் ஒதுக்கப்பட்டு இருந்தது. அதற்கு முன்பு மதுரை சென்று வர அவர் முடிவு செய்தார். இந்த சூழலில் செங்கோட்டையில் இருந்து ஈரோடு செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் நேற்று காலை கள்ளிக்குடி வந்தது. அப்போது அந்த ரெயிலில் ஏற முயன்ற போது அவர் கால் தவறி நடைமேடைக்கும் ரெயிலுக்கும் இடையில் விழுந்ததால் தலையில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் விருதுநகர் ரெயில்வே போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் கள்ளிக்குடி பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# கேரளாவில் இருந்து குமரிக்கு கஞ்சா கடத்தல்: 4 பேர் கைது

கன்னியாகுமரி, பிப்.22

குமரி மாவட்டத்திற்கு கேரளா வழியாக கஞ்சா கடத்தப்படுவதாக போலீசாருக்கு புகார் வந்த வண்ணம் உள்ளது. இதனால் சிறப்பு படை போலீசார் அவ்வப்போது எல்லை பகுதிகளில் ரோந்து பணி மேற்கொண்டு கஞ்சா கடத்தி வருபவர்களை கண்காணித்து வருகிறார்கள்.

இந்தநிலையில் நேற்று இரவு அருமனை அருகே உள்ள பனச்சமூடு பகுதியில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 4 பேரை சந்தேகத்தின் பேரில் பிடித்து சோதனை செய்தனர். அப்போது அவர்கள் வந்த மோட்டார்சைக்கிள்களில் கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து 4 பேரையும் போலீஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர்கள் தேவிகோடு ஆயவிளையை சேர்ந்தவர்கள் என்பதும், கேரளாவில் இருந்து மோட்டார்சைக்கிள்களில் கஞ்சா கடத்தி வந்ததும் தெரிய வந்தது. இந்த கஞ்சாவை குமரி மாவட்டத்தில் விற்பனை செய்வதற்காக கடத்தி வந்துள்ளனர். இதையடுத்து 4 பேரையும் போலீசார் கைது செய்த போலீசார், அவர்களிடம் இருந்து 4 கிலோ கஞ்சா மற்றும் 2 மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

# மதுரை எய்ம்ஸ்: 2027ம் ஆண்டுக்குள் முழு கட்டுமானத்தையும் முடிக்க திட்டம்

மதுரை, பிப்.22

மதுரை மாவட்டம் தோப்பூரில் 220 ஏக்கர் பரப்பளவில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் முழு கட்டுமான திட்டத்தையும் பிப்ரவரி 2027 க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக மதுரை எய்ம்ஸ் முதன்மை இயக்குனர் ஹனுமந்த ராவ் தெரிவித்துள்ளார்.




இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மதுரை எய்ம்ஸ் கட்டுமானம் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றத்தை அடைந்து வருகிறது.

இது தமிழ்நாடு மற்றும் அண்டை மாநில மக்களுக்கு சிறந்த சுகாதாரம் மற்றும் மருத்துவக் கல்விக்கான நம்பிக்கையை அளிக்கிறது. தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்திலுள்ள தோப்பூரில் 220 ஏக்கர் பரப்பளவில் பரந்த வளாகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனைக் கட்டப்பட்டு வருகிறது. மே 22, 2024 அன்று தொடங்கப்பட்ட இந்த கட்டுமானத் திட்டம் இரண்டு கட்டங்களாக நிறைவடையும்.

முதற்கட்டத்தில் கல்வி வளாகம், வெளிநோயாளர் மருத்துவ சேவைகள், மாணவ / மாணவியர் தங்கும் விடுதிகள் மற்றும் அத்தியாவசிய சேவை கட்டிடங்கள் போன்ற முக்கிய வசதிகள் அடங்கி உள்ளன. இந்த முதற்கட்டப் பணிகள் சிறப்பாக நடந்து வருகின்றன.

முதற்கட்டப் பணிகள் தொடக்க தேதியிலிருந்து 18 மாதங்களுக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜனவரி 2025 நிலவரப்படி முதற்கட்ட கட்டுமானத்தில் 24 சதவீதம் நிறைவடைந்துள்ளது.

இரண்டாவது கட்டத்தில் மீதமுள்ள உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். முழு கட்டுமானத் திட்டத்தையும் பிப்ரவரி 2027 க்குள் 33 மாதங்களில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை, ஒட்டுமொத்தமாக கட்டுமானத்தில் 14.5 சதவீதம் முன்னேற்றம் அடைந்துள்ளது. நீடித்த நிலைத்தன்மையை மையமாகக் கொண்டு, உலகளாவிய தரநிலைகளுக்கு ஏற்ப கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுற்றுச்சூழல் பொறுப்பு மற்றும் எரிசக்தி செயல்திறனை வலியுறுத்தி, IGBC Gold மதிப்பீட்டை அடைவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மதுரை எய்ம்ஸ் வளாகம் நோயளிக்களுக்கனான அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கொண்டுள்ள 900 படுக்கைகளில் 150 படுக்கைகள் பிரத்யேகமாக தொற்று நோய்க்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையில் கல்வி வளாகம், மருத்துவமனை வளாகம், விடுதி வளாகம், குடியிருப்பு வளாகம், விளையாட்டு வசதிகள் மற்றும் 750 இருக்கைகள் கொண்ட ஆடிட்டோரியம் ஆகியவை அடங்கியுள்ளன. இது மாணவர்கள் மற்றும் நோயாளிகள் இருவருக்கும் ஒரு முழுமையான தன்னிறைவை உறுதி செய்கிறது.

வளர்ந்து வரும் மாணவர்களின்எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர் பணிச் சேர்க்கையும் படிப்படியாக நடந்து வருகிறது, மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை நிர்வாகம் ஆசிரியர் பற்றாக்குறையின்மையையும் மற்றும் உயர் கல்வித் தரத்தையும் உறுதி செய்கிறது. தற்போது, மதுரை எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி ராமநாதபுரத்திலுள்ள மாநில அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்தில், மதுரை எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியை அதன் நிரந்தர வளாகத்திற்கு மாற்ற முயற்சிகள் நடந்து வருகின்றன.

மதுரை எய்ம்ஸ் மற்றொரு சுகாதார மையம் மட்டுமல்ல இது தமிழ்நாடு மற்றும் தென்னிந்திய மக்களுக்கு மேம்பட்ட மருத்துவ பராமரிப்பு, மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் தரமான கல்வி வழங்க வேண்டுமென உறுதிக் கொண்டுள்ளது. நீடித்த நிலையான முன்னேற்றம் மற்றும் உலகத்தரம் வாய்ந்த வசதிகளை வழங்குவதற்கான அர்ப்பணிப்புடன், இந்த நிறுவனம் பிராந்தியத்தின் சுகாதார நிலப்பரப்பாக மாற்றத் தயாராக உள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிதம்பரம் நடராஜர் கோவில் கனக சபை விவகாரம் ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, பிப்.22

சிதம்பரம் நடராஜர் கோவிலில், கனகசபை மீது நின்று பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதி அளித்துபிறப்பிக்கப்பட்ட அரசாணையை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த வழக்குகள் கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, சிதம்பரம் நடராஜர் கோவிலில் கனகசபை மீதேறி பக்தர்கள் தரிசனம் செய்ய எந்தெந்த நேரத்தில் அனுமதிக்கப்படுவர்? என்ன நடைமுறை பின்பற்றப்படும்? என்பது குறித்த திட்டத்தை தாக்கல் செய்யும்படி பொது தீட்சிதர்கள் தரப்பிற்கு ஐகோர்ட்டு அறிவுறுத்தியிருந்தது.

இந்த வழக்குகள், நீதிபதி சுரேஷ்குமார், நீதிபதி சவுந்தர் ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தன. அப்போது பொது தீட்சிதர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், கால பூஜைகளுக்கு இடையில் கனக சபையில் பக்தர்களுக்கு தரிசனம் செய்ய அனுமதி வழங்குவது என முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு ஏதுவாக சாய்வுதலபாதைஅமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொது தீட்சிதர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவுக்கு ஆட்சேபம் தெரிவித்த இந்து சமய அறநிலையத்துறை தரப்பு வழக்கறிஞர், "பக்தர்கள் சுவாமிக்கு எதிரில் நின்று தரிசனம் செய்ய வேண்டும். அதை விடுத்து ஒரு ஓரத்தில் தரிசனம் செய்து கொள்ள அனுமதிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது" என்று தெரிவித்தார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், கோவில் திறந்திருக்கும் 11 மணி நேரத்தில், ஆறு கால பூஜைகள் பால் நெய்வேத்தியம் உள்ளிட்ட பிற பூஜைகள் 8 மணி நேரம் நடத்தப்படுவதாகவும், மீதமுள்ள 3 மணி நேரத்தில் அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் கனக சபை மீது நின்று தரிசனம் செய்ய ஏதுவாக, ஒரே வழியில் சென்று வருவதை தவிர்த்து கூடுதல் வழியை ஏற்படுத்துவது குறித்து கட்டிடக்கலை வல்லுநர்களுடன் ஆலோசித்து திட்டத்தை தாக்கல் செய்ய வேண்டும் என்று பொது தீட்சிதர்கள் தரப்புக்கு உத்தரவிட்டனர்.

மேலும், வழக்கின் விசாரணையை மார்ச் 6ந்தேதிக்கு நீதிபதிகள் தள்ளி வைத்தனர். அதேசமயம் இந்த விவகாரம் தொடர்பாக இந்து சமய அறநிலையத்துறையும் தங்கள்தரப்பு கருத்துகளை மனுவாக தாக்கல் செய்ய அனுமதி அளித்து நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

# ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆணையத்துக்கு புதிய நிர்வாகிகள் நியமனம் தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, பிப்22

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

மாநில அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்ஆகியோருடைய சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய நலனை பாதுகாக்கவும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம் அமைக்கப்பட்டு தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்பட்டு வருகிறது.




இந்த ஆணையத்தில் துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களின் மூன்று ஆண்டுகள் பதவிக்காலம் முடிவுபெற்ற நிலையில், தற்போது நீதிபதி ச.தமிழ்வாணன் தலைவராகவும், ஜெ.ரேகா பிரியதர்ஷினி உறுப்பினராகவும் பணிபுரிந்து வருகின்றனர்.

எனவே, இந்த ஆணையத்திற்கு காலிப்பணியிடங்களை நிரப்பும் வகையில் துணைத்தலைவராக இமயம் என்பவரையும், செ.செல்வகுமார் சு.ஆனந்தராஜா, மு.பொன்தோஸ், பொ.இளஞ்செழியன் ஆகியோரை உறுப்பினர்களாகவும் நியமனம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னை | பூட்டிய வீடுகளை குறிவைத்து திருட்டு: மகாராஷ்டிராவை சேர்ந்த 3 பேர் சென்னையில் கைது



சென்னை: பூட்டியிருக்கும் வீடுகளை குறி வைத்து கொள்ளையில் ஈடுபட்டதாக மகாராஷ்டிராவைச் சேர்ந்த சகோதரர்கள் உள்பட 3 பேரை வியாசார்பாடி போலீஸார் கைது செய்துள்ளனர். சென்னை வியாசர்பாடி, பொன்னப்பன் தெருவைச் சேர்ந்தவர் மாரிமுத்து (51). சென்னையில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் முதுநிலை மேலாளராக பணியாற்றுகிறார். இவர், கடந்த ஆண்டு செப்டம்பர் 23-ம் தேதி வீட்டை பூட்டி விட்டு பணிக்கு சென்றுவிட்டு மீண்டும் வீடு திரும்பினார். அப்போது, வீட்டின் கதவு உடைக்கப்பட்டு பீரோவில் வைத்திருந்த சுமார் 57 பவுன் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. மாரிமுத்து இது தொடர்பாக வியாசர்பாடி காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். முதல் கட்டமாக சம்பவ இடம் மற்றும் அதை சுற்றி பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்தனர். இதில், மாரிமுத்து வீட்டில் கைவரிசை காட்டியது மகாராஷ்டிரா மாநிலம், புனேயைச் சேர்ந்த சந்திரகாந்த் ஆனந்த் மானே (32), அவரது சகோதரர் அதே மாநிலத்தைச் சேர்ந்த சசிகாந்த் ஆனந்த் மானே (28) மற்றும் மங்கேஷ் சாங்கிள் (27) என்பது தெரிந்தது. தலைமறைவாக இருந்த 3 பேரையும் தனிப்படை போலீஸார் சென்னையில் கைது செய்தனர். விசாரணையில் கைது செய்யப்பட்ட மூவரும் தமிழகம் தவிர ,கர்நாடகா உள்பட பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று அங்கு பூட்டி இருந்த வீடுகளில் கொள்ளையடித்துள்ளனர். நகைகளை விற்று கிடைக்கும் பணத்தை பங்கிட்டுக் கொண்டதாக போலீஸார் தெரிவித்தனர்.

# சென்னை | ஏடிஎம் மையத்தில் முதியவருக்கு உதவுவது போல் நடித்து மோசடி




சென்னை: ஏடிஎம் மையத்தில் முதியவருக்கு உதவுவதுபோல் நடித்து ரூ.48 ஆயிரம் பறித்த நபரை போலீஸார் தேடி வருகின்றனர். சென்னை புளியந்தோப்பைச் சேர்ந்தவர் ராமச்சந்திரன் (73). இவர் நேற்று முன்தினம் புளியந்தோப்பு நெடுஞ்சாலையில் உள்ள பொதுத்துறை வங்கி ஏடிஎம் ஒன்றில் பணம் எடுக்கச் சென்றார். அவர் ஏடிஎம் இயந்திரம் மூலம் பணம் எடுக்கத் தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தார். அப்போது, அங்கு வந்த இளைஞர் ஒருவர் முதியவருக்கு உதவுவதுபோல் நடித்து, ஏடிஎம் அட்டையின் ரகசிய எண்ணை (பின்) தெரிந்து கொண்டு வேறு ஏடிஎம் கார்டை மாற்றி கொடுத்தார். பின்னர், முதியவரிடம் உங்களின் ஏடிஎம் கார்டு செயல்படவில்லை எனக்கூறி அனுப்பி வைத்தார். ராமச்சந்திரன் சென்ற பிறகு அவரது கார்டு மூலம் ரூ.48 ஆயிரம் பணத்தை எடுத்துச் சென்றார்.

# ஒப்பந்ததாரரிடம் லஞ்சம் பெற்ற பழநி தேவஸ்தான செயற்பொறியாளர் கைது



கட்டிட ஒப்பந்ததாரரிடம் ரூ.18 ஆயிரம் லஞ்சம் பெற்ற பழநி கோயில் தேவஸ்தான செயற்பொறியாளர் பிரேம்குமாரை, லஞ்ச ஒழிப்பு போலீஸார் நேற்று கைது செய்தனர். பழநி தேவஸ்தானம் சார்பி, ஒட்டன்சத்திரத்தில் ரூ.71 லட்சம் மதிப்பில் திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் முடிவடைந்த நிலையில், பாக்கி ரூ.21 லட்சத்தை வழங்கக் கோரி ஒப்பந்ததாரர் செந்தில்குமார், தேவஸ்தான கட்டிடப் பிரிவு செயற்பொறியாளர் பிரேம்குமாரை (50) அணுகினார். இந்த தொகையை வழங்க ரூ.18 ஆயிரம் லஞ்சம் கொடுக்குமாறு பிரேம்குமார் கேட்டுள்ளார். ஆனால், லஞ்சம் கொடுக்க விரும்பாத ஒப்பந்ததாரர், இது தொடர்பாக திண்டுக்கல் லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸாரிடம் புகார் அளித்தார். போலீஸார் அறிவுரையின்படி, செந்தில்குமார் நேற்று ரசாயனம் தடவிய ரூ.18 ஆயிரம் பணத்தை பழநி தேவஸ்தான அலுவலகத்தில் செயற்பொறியாளர் பிரேம்குமாரிடம் கொடுத்தார். அப்போது, அங்கு மறைந்திருந்த டிஎஸ்பி நாகராஜன் தலைமையிலான லஞ்ச ஒழிப்புப் பிரிவு போலீஸார், பிரேம்குமாரை கைது செய்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# கிருஷ்ணகிரி மலையில் அதிர்ச்சி: பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்த 4 பேர் கைது: நடந்தது என்ன?



கிருஷ்ணகிரி மலையில் பெண்ணை கூட்டு பாலியல் பலாத்காரம் செய்து வழிப்பறியில் ஈடுபட்ட சம்பவத்தில் தப்பியோடிய ஒருவரை துப்பாக்கியால் போலீஸார் சுட்டுபிடித்தனர். மேலும், ஒருவருக்கு கால் முறிவும், 2 பேரை போலீஸார் கைது செயதனர். கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் பின்புறம் மலை உள்ளது. இந்த மலைக்கு கடந்த 19-ம் தேதி பிற்பகல் 3 மணி அளவில் திருப்பத்தூர் பகுதியை சேர்ந்த 35 வயது ஆண் ஒருவரும், 30 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரும் சென்றனர். அவர்கள் மலையின் உச்சிக்கு சென்ற போது அங்கு 4 இளைஞர்கள் மது போதையில் அமர்ந்திருந்தனர். இதையடுத்து அந்த பெண்ணையும், உடன் வந்தவரையும் கத்தி முனையில் மிரட்டி 4 இளைஞர்களும், பெண் அணிந்திருந்த தங்க நகைகளை மற்றும் ரூ.7 ஆயிரம் ரொக்க பணத்தையும் பறித்தனர். தொடர்ந்து 4 இளைஞர்களில், 2 பேர் அந்த பெண்ணை மிரட்டி பாலியல் பலாத்காரம் செய்தனர். இந்த சம்பவத்தை உடனிருந்த 2 பேர், தங்களது செல்போனில் வீடியோவாக பதிவு செய்தனர். மேலும், அந்த பெண்ணுடன் வந்தவரின் செல்போனை பறித்த கும்பல், அவரது ஜிபே செயலி மூலம் ரூ.7 ஆயிரம் பறித்துக் கொண்டனர். இந்நிலையில், மலையில் இருந்து கீழே இறங்கி வந்த ஆண் மற்றும் பெண் மிகவும் சோர்வாக அழுதபடி வந்தததை, கண்ட அங்கிருந்தவர்கள் விசாரித்த போது, மலையில் நடந்த சம்பவத்தை கூறினர். மேலும்,போலீஸில் புகார் அளிக்காமல் சென்றுவிட்டார். இதுகுறித்து தகவலறிந்த கிருஷ்ணகிரி எஸ்பி தங்கதுரை, தனிப்படை அமைத்து முழுமையாக விசாரணை நடத்த உத்தரவிட்டார். தொடர்ந்து, கிருஷ்ணகிரி டவுன் மற்றும் தனிப்படை போலீஸார் நடத்திய விசாரணையில், பெண்ணை மிரட்டி பணம், நகை வழிப்பறி செய்தது கிருஷ்ணகிரி பழையபேட்டை பகுதியை சேர்ந்த கலையரசன் (21), அபிஷேக் (20) மற்றும் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்தவர்கள் கிருஷ்ணகிரியை சேர்ந்த சுரேஷ் (22), நாராயணன் (21) என தெரிந்தது. இதையடுத்து கலையரசன், அபிஷேக் ஆகியோர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர். தலைமறைவாக இருந்த சுரேஷ், நாராயணன் ஆகியோரை போலீஸார் தேடி வந்தநிலையில், தாலுகா காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பொன்மலை குட்டை பெருமாள் கோயில் பின்புறம் பதுக்கியிருப்பதாக தகவல் கிடைத்தது. துப்பாக்கி சூடு: இதனை தொடர்ந்து டவுன் இன்ஸ்பெக்டர் வெங்கடேஷ்பிரபு, எஸ்ஐ பிரபாகர், முதல்நிலை காவலர் குமார், காவலர் குமார் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்றனர். போலீஸாரை கண்டதும் சுரேஷ், நாராயணன் தாங்கள் வைத்திருந்த கத்தியால் போலீஸார் குமார், விஜய்குமாரை தாக்கி விட்டு தப்பியோட முயன்றனர். இதையடுத்து போலீஸார் தாங்கள் வைத்திருந்த துப்பாக்கியால் முதலில் வானத்தை நோக்கி சுட்டனர். தொடர்ந்து சுரேசும், நாராயணனும் ஓட முயற்சி செய்யவே, சுரேசின் வலது முட்டில் துப்பாக்கியால் சுட்டனர். இதில் படுகாயம் அடைந்த சுரேஷ் அங்கேயே கீழே விழுந்தார். மேலும், தப்பியோடிய நாராயணன் கீழே விழுந்ததில் அவருக்கு வலது காலில் முறிவு ஏற்பட்டது. எஸ்பி விசாரணை: இச்சம்பவம் குறித்து தகவலறிந்து நிகழ்விடத்திற்கு வந்த எஸ்பி தங்கதுரை, ஏடிஎஸ்பி சங்கர், டிஎஸ்பி முரளி ஆகியோர் விசாரணை நடத்தினர். தொடர்ந்து கத்தியால் குத்தியதில் காயம் அடைந்த போலீஸார் குமார், விஜயகுமார் மற்றும் துப்பாக்கியால் சுட்டு பிடிக்கப்பட்ட சுரேஷ், கால் முறிவு ஏற்பட்ட நாராயணன் ஆகியோரையும் மீட்டு சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுப்பி வைத்தனர். தொடர்ந்து துப்பாக்கி சூடு நடந்த இடத்தை எஸ்பி பார்வையிட்டு விசாரணை நடத்தினார். தடவியல் நிபுணர்கள் அங்கிருந்த தடயங்களை சேகரித்தனர். இதுகுறித்து கிருஷ்ணகிரி டவுன், தாலுகா போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். சுரேஷ் மீது ஏற்கனவே 2 வழக்குகள்: இதுகுறித்து எஸ்பி தங்கதுரை செய்தியாளர்களிடம் கூறியதாவது: கிருஷ்ணகிரி மலை பகுதியில் பெண் ஒருவரும், ஆண் ஒருவரும் வந்திருந்தனர். அவர்களில் அந்த பெண்ணை 4 பேர் மிரட்டி நகை, பணத்தை பறித்தனர். இதில் 2 பேர் அந்த பெண்ணிடம் பாலியல் ரீதியாக துன்புறுத்தலில் ஈடுபட்டனர். இச்சம்பவம் தொடர்பாக 4 பேர் அடையாளம் காணப்பட்டதில், நேற்று முன்தினம் 2 பேர் கைது செய்தனர். இன்று(நேற்று) பொன்மலை குட்டை பெருமாள் கோயில் பின்புறம் பதுக்கியிருந்த 2 பேரை பிடிக்க சென்ற போலீஸாரை தாக்கினர். அப்போது போலீசார் தற்காப்புக்காக குற்றவாளிகளில் சுரேஷ் என்பவரை சுட்டு பிடித்தனர். மற்றொரு நபர் நாராயணன் என்பவர் தப்ப முயன்ற போது தவறி விழுந்ததில் கால் முறிந்தது. கைதான சுரேஷ் மீது 2 அடிதடி வழக்குகள் உள்ளன. இது தொடர்பாக மேலும் விசாரணை நடத்தி வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# 'இரட்டை வேடம் போட வேண்டிய நிலை எனக்கு இல்லை' அண்ணாமலைக்கு திருமாவளவன் பதிலடி



சென்னை, பிப்.22

மும்மொழிக்கொள்கை விவகாரம் தமிழகத்தில் தற்போது பேசுபொருளாகி வருகிறது. இந்த நிலையில், சி.பி.எஸ்.இ. பள்ளியின் நிர்வாக குழு தலைவராக விசிக தலைவர் திருமாவளவன், செயல்பட்டு வருகிறார் என பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார். அரசுப் பள்ளியில் ஏழை எளிய மாணவர்களுக்கு மும்மொழிகள் வேண்டாம் என்று கூறுபவர்கள் அனைவருமே, மும்மொழிகள் பயிற்றுவிக்கும் தனியார் பள்ளிகளுடன், ஏதோ ஒரு வகையில் தொடர்பில் இருப்பது ஏன்? என கேள்வியெழுப்பிய அண்ணாமலை, இந்த விவகாரத்தில் திருமாவளவனும் இரட்டை வேடம் போடுவதாக தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருந்தார்.

அண்ணாமலையின் இந்த பதிவுக்கு விசிக தலைவர் திருமாவளவன் எதிர்வினையாற்றியுள்ளார். செய்தியாளர்களை சந்தித்த அவர், இது தொடர்பாக பேசியதாவது;

"அண்ணாமலை பரபரப்புக்காக ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றை பேசிக் கொண்டு இருக்கிறார். அவருக்கு ஊடக கவன ஈர்ப்பு முக்கியமானதாக இருக்கிறது. ஒரு நாகரிக அணுகுமுறை என்பதை முற்றாக தவிர்த்துவிட்டு யாரையும் எப்படியும் விமர்சிக்கலாம் என்கிற நிலைப்பாட்டை எடுத்து அவர் அரசியல் செய்கிறார். அவருடைய அணுகுமுறை என்பது வியப்பாக இருக்கிறது. இரட்டை வேடம் போட வேண்டிய நிலை எனக்கு இல்லை. நான் சி.பி.எஸ்.இ. பள்ளி நடத்தவில்லை. எங்கள் இடத்தில் ஒரு நிறுவனம் பள்ளி நடத்த அனுமதி கேட்டுள்ளனர். அந்த பள்ளியில் ஒரு மாணவர் கூட சேரவில்லை. வகுப்புகளும் தொடங்கவில்லை. அறிவிப்பு மட்டுமே வந்துள்ளது. அந்த இடம் எங்களுடைய இடம் என்பதால் என் பெயரை பயன்படுத்தியுள்ளனர். ஒரு மாணவர் கூட சேராத பள்ளியில் மும்மொழி கட்டாயமாக வைத்துள்ளதாக, ஊடக விமர்சனத்திற்காக அண்ணாமலை பேசி வருகிறார்."

இவ்வாறு அவர் பேசினார்.

# இளைஞர் நீதி குழுமத்திற்கு சமூகப் பணி உறுப்பினர்கள் நியமனம்

சென்னை, பிப்.22

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் விதிமுறைகளின்படி அரியலூர், கடலூர், ஈரோடு, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருவாரூர், தஞ்சாவூர், தேனி, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இளைஞர் நீதி குழுமத்திற்கு சமூகப்பணி உறுப்பினர்கள் நியமிக்கப்படுவற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இளைஞர் நீதி குழுமத்திற்கு ஒரு பெண் உட்பட இரண்டு சமூகப்பணி உறுப்பினர்கள் அரசால் மதிப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர் மற்றும் இப்பதவி அரசு பணி அல்ல. விண்ணப்பதாரர் குழந்தைகள் தொடர்பான உடல் நலம், கல்வி அல்லது குழந்தைகளுக்கான நலப்பணிகளில் குறைந்தது 7 ஆண்டுகள் முனைப்புடன் ஈடுபாடு கொண்டவராக இருத்தல் வேண்டும்; (அல்லது) குழந்தை உளவியல், மனநல மருத்துவம், சமூகவியல் அல்லது சட்டம் ஆகியவற்றில் ஏதேனும் பட்டம் பெற்று தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும். மேலும் பத்திரிக்கையில் செய்தி வெளியிடும் நாளில், விண்ணப்பதாரர்கள் 35 வயதுக்கு குறையாதவராகவும் 65 வயதைப் பூர்த்தி செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பபடிவத்தை அந்தந்த மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது துறைசார்ந்த இணையதள முகவரியிலிருந்து (https://dsdcpimms.tn.gov.in) விண்ணப்பத்தாரர் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். தகுதிவாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு அதற்கான அமைந்த படிவத்தில் 07.03.2025 (வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணிக்குள் கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கப்பெறுமாறு விண்ணப்பிக்கலாம்.

இயக்குநர்,
குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை,
எண். 300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை – 600 010.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும். இது குறித்து அரசின் முடிவே இறுதியானது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பழனி திருக்கோவில் பொறியாளர் கைது



பழனி, பிப்.22

திண்டுக்கல் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் அலுவலக பொறியாளர் பிரிவு அலுவலக பிரிவு பொறியாளர் பிரேம்பகுமார், இவர் ஒப்பங்கக்காரருக்கு ஒட்டன்சத்திரத்தில் திருக்கோவில் சார்பாக கட்டப்பட்ட திருமமண மண்டபத்தில் இறுதி தவணை பணம் ரூ.21 மட்சத்தைவிடுவிப்பதற்கு ரூ.18 ஆயிரம் லஞ்சம் பெறும்போது லஞ்ச ஒய்ப்பு போலீசார் கையும் களவுமாக சிக்கினார்.

பொறியாளர் பிரேம்குமாரை திண்டுக்கல் லஞ்சர் ஒழிப்பு துறை டிஎஸ்பி நாகராஜ் தலைமையிலான போலீசார் கைது செய்து விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

# அய்யா வைகுண்டர் அவதார தினம்: மார்ச் 4ல் நெல்லை, தூத்துக்குடிக்கு உள்ளூர் விடுமுறை




திருநெல்வேலி பிப்.22

சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடியவர் அய்யா வைகுண்டர். அவர் வழியை பின்பற்றும் மக்கள், அவரை சிவன் பிரம்மா விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகள் ஒருங்கிணைந்த அவதாரமாக கருதி வழிபட்டு வருகின்றனர். குறிப்பாக, தென் மாவட்டங்களை சேர்ந்த பெரும்பாலான மக்கள் அவரை வழிபட்டு வருகின்றனர்.

வைகுண்டரின் பிறந்த தினத்தன்று, அவரை வழிபடும் மக்கள், அந்தந்த பகுதிகளில் ஊர்வலம் செல்வது வழக்கம். அவரின் அவதார தினத்தைக் கொண்டாடும் வகையிலும், பக்தர்களின் வசதியையும், பாதுகாப்பையும் கருத்தில் கொண்டும் தென் மாவட்டங்களுக்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்படுவது வழக்கம்.

அந்த வகையில், அய்யா வைகுண்டரின் 193வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு வருகிற மார்ச் 4ஆம் தேதி நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ளூர் விடுமுறையாக விடப்படுவதாக இரு மாவட்டங்களின் கலெக்டர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த விடுமுறை நாளை ஈடு செய்யும் வகையில் (மார்ச் 15) சனிக்கிழமை அன்று வேலை நாளாக அறிவிக்கப்படுகிறது. மேற்படி (மார்ச் 04) உள்ளூர் விடுமுறை நாளன்று நடத்தப்பட உள்ள அரசு பொதுத் தேர்வுகள் அனைத்தும் எவ்வித மாறுதலுமின்றி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிலையான வருமானத்தை கொடுத்த சமுதாயத் திறன் பள்ளி | வாழ்ந்து காட்டுவோம்!





நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் வட்டாரத்தில் உள்ள பாப்பம்பாளையம் ஊராட்சியானது மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்று. வாழ்வாதாரத்திற்காக இப்பகுதி மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ளனர். மேலும், இப்பகுதியில் நிலக்கடலை, தென்னை விவசாயம் அதிக அளவில் நடைபெறுகிறது. விவசாயத்திற்காகப் பூச்சிக்கொல்லிகள் அதிக அளவு பயன்படுத்தப்படுகின்றன. அதனால் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தின் மூலம் இப்பகுதியில் உள்ள 20 பெண்களைக் கொண்டு இயற்கை இடுபொருள்கள் தயாரிக்கும் சமுதாயத் திறன் பள்ளிப் பயிற்சி வழங்கப்பட்டது. பஞ்சகவ்யம், மீன் அமிலம், மண்புழு உரம் தயாரித்தல் போன்ற பயிற்சிகளைப் பயிற்சியாளர் நல்லசிவம் வழங்கினார். பயிற்சி பெற்ற 16 பெண்களைக் கொண்டு 'செங்கோ தொழில் குழு' உருவாக்கப்பட்டது. இக்குழுவில் உள்ள பெண்கள் அனைவரும் ஒன்றாக இனணந்து இயற்கை இடுபொருள்கள் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

இந்தத் தொழில் குழுவின் செயல்பாடுகளை ஆராய்ந்து தொழிலை விரிவுபடுத்த தமிழ்நாடு வேளாண்மை துறையின் மூலம் ரூ.1,00,000 மானியம் வழங்கப்பட்டது. மேலும், பாப்பம்பாளையத்தில் சில்லறை விற்பனை நிலையம் அமைக்க பள்ளிபாளையம் Seshasayee Paper and Boards Limited மூலம் கண்டெய்னர் இலவசமாக வழங்கப்பட்டது. இதன் மூலம் பாப்பம்பாளையத்தில் செங்கோ இயற்கை இடுபொருள் சில்லறை விற்பனை நிலையம் அமைக்கப்பட்டது. இந்தத் தொழில் குழு ஒவ்வொரு மாதமும் தோராயமாக ரூ.50,000 வரை விற்பனை செய்து வருகின்றது. இக்குழு உறுப்பினர்களின் தேவையின் அடிப்படையில் அவர்கள் லாபத் தொகையைப் பகிர்ந்துகொள்கிறார்கள். சமுதாயத் திறன் பள்ளியின் மூலம் வழங்கப்பட்ட பயிற்சியின் மூலம் பெண்கள் நிலையான வருமானத்தைப் பெற உறுதுணையாக இருந்தமைக்கு நாங்கள் பெருமை கொள்கிறோம். புதிய வாழ்வைத் தந்த 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம் என் பெயர் ஜீவிதா, என் கணவர் பெயர் மணிகன்டன். நான் ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் வட்டாரம் ஜம்புகுளம் கிராமத்தில் வசித்துவருகிறேன். என் கணவர் கூலி வேலை செய்துவருகிறார். இதன் மூலம் கிடைக்கும் வருமானம் மட்டுமே எங்கள் குடும்பத்திற்கான முக்கிய வருமானம். இந்நிலையில், 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தில் எங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் சமுதாயத் திறன் பள்ளி LED பல்பு தயாரித்தல் பயிற்சி 10 நாள்கள் நடைபெற்றது. பயிற்சிக்கு பின் சில நாள்கள் தனித் தனியாக பல்பு தயாரித்தோம். அதில் விற்பனை செய்வதில் சிரமம் ஏற்பட்டது. மேலும், மூலப்பொருள்களைத் தனித்தனியாக வாங்குவதால் அதிக விலை கொடுத்து வாங்கும் சூழ்நிலை ஏற்பட்டது. பின்பு அனைவரும் இணைந்து 'ரோஜா தொழில் குழு' என்கிற பெயரில் குழுவாக அமைத்துச் செயல்பட்டோம். இதன் மூலம் மாதத்திற்கு 300 முதல் 500 வரையிலான LED பல்புகள் உற்பத்தி செய்யப்படுவதால் மாத வருமானம் கூடுதலாகக் கிடைக்கிறது. மேலும் LED பல்புக்கு Own Branding and Labelling, Logo ஆகியவற்றைச் செய்துள்ளோம். இணைமானியத் திட்டத்தில் 30% மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் ரூ.2,00,000 பெற விண்ணப்பித்துள்ளோம். இதன் மூலம் கூடுதலாக இயந்திரம் வாங்கி, தற்போது செய்துவரும் தொழிலைப் பெரிய அளவில் விரிவாக்கி கடைகளுக்கு மொத்த விலையில் விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளோம். மேலும் ஆன்லைன் மூலமும் விற்பனை செய்யப் போகிறோம்.

## கட்சிகளின் வெற்றி, தோல்வி: தேர்தல் ஆணையம் பலிகடாவா?




இந்திய தலைமை தேர்தல் ஆணையராக ஞானேஷ் குமார் பொறுப்பேற்றுக் கொண்டார். கடந்த 2022-ம் ஆண்டு மே மாதம் 15-ம் தேதி தலைமை தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்ட ராஜீவ் குமார் கடந்த பிப்ரவரி 18-ம் தேதி வரை பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். கடைசியாக அவர் அரசியல் கட்சிகளுக்கு ஒரு கருத்தை பதிவு செய்துவிட்டுதான் சென்றிருக்கிறார். 'தேர்தல் நடைபெறும் போது ஒவ்வொரு படிநிலையிலும் ஏதாவது தவறு நேர்ந்தால் ஆட்சேபனை எழுப்பலாம். மேல்முறையீடு செய்யலாம். சந்தேகத்தை உருவாக்க முயற்சிப்பது விரும்பத்தகாத செயல். தேர்தல் முடிவு சாதகமாக இல்லை என்பதற்காக அதை ஏற்காத கட்சிகள், வேட்பாளர்கள் தேர்தல் ஆணைய அதிகாரிகள் மீது நியாயமற்ற முறையில் குற்றம் சாட்டுகின்றனர். இந்த விஷயத்தில் தேர்தல் ஆணையம் மிக வசதியாக பலிகடா ஆக்கப்படுகிறது'' என்று தன் ஆதங்கத்தை விட்டு சென்றிருக்கிறார். தேர்தலில் தோற்றுப் போகும் கட்சி, குறிப்பாக ஆளும் கட்சி தோற்றுப் போனால் தேர்தல் ஆணையத்தை குறை வைப்பது வழக்கமாகி விட்டது. முதலில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களை குறை கூறுவது. ஏஐ தொழில்நுட்பத்துக்கு வந்துவிட்ட நிலையிலும், பழைய வாக்குச் சீட்டு முறை பற்றி பேசுகின்றனர். ஆனால் தேர்தல் ஆணையம் அழைப்பு விடுத்தும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க அரசியல் கட்சிகள் முன்வருவதில்லை. மாநில தேர்தலோ அல்லது பொதுத் தேர்தலோ... எத்தனை தொகுதிகள், ஒவ்வொரு தொகுதியிலும் மாறுபடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, அதற்கேற்ப வாக்குச் சாவடிகள், எத்தனை வாக்குப் பதிவு இயந்திரங்கள், ஒரு வாக்குச் சாவடியில் எத்தனை வாக்காளர்கள், அவர்களில் வாக்களித்தவர்கள் எத்தனை பேர்... இவ்வளவு விஷயங்களையும் துல்லியமாக கணக்கிட்டு வாக்குப் பதிவு இயந்திரங்களை ஹேக் செய்து ஒரு கட்சிக்கு சாதகமாக மாற்ற முடியுமா? இவை எல்லாம் நடைமுறை சாத்தியமா? யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. ஆனால், தோல்விக்கு மட்டும் மின்னணு இயந்திரங்கள் காரணம்? அடுத்து, ஆளும் கட்சிக்கு ஆதரவாக தேர்தல் ஆணையம் செயல்படுகிறது என்ற குற்றச்சாட்டு. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் போது அனைத்துக் கட்சிகளுமே விதிமீறலில் ஈடுபடுகின்றன. ஒரு தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமைப்பு, தேர்தலில் கவனம் செலுத்த வேண்டுமா? அல்லது அரசியல் கட்சிகளின் லாவணியை விசாரித்து எது சரி, எது தவறு என்று தீர்ப்பு சொல்ல வேண்டுமா? உலகின் மிகப்பெரிய ஜனநாயக திருவிழாவான இந்திய தேர்தலில் பிரச்சாரத்தை கண்காணிப்பது, பணம் பட்டுவாடாவை தடுப்பது, வன்முறை, வாக்குச் சாவடி கைப்பற்றலை தடுப்பது, வாக்கு சதவீதத்தை அதிகரிப்பதில் கவனம் செலுத்துவது என ஏகப்பட்ட பணிகள் குவிந்து கிடக்கின்றன. அவற்றில் கவனம் செலுத்த தேர்தல் ஆணையத்துக்கு வழிவிட வேண்டும். தேர்தலில் வெற்றி தோல்வி என்பது அந்தந்த கட்சிகளின் செயல்பாடுகளைப் பொறுத்தது என்பதை உணரவேண்டும். அதுவரை தற்போது தலைமை தேர்தல் ஆணையராக பதவியேற்றுள்ள ஞானேஷ் குமார் சொல்வது போல் "தேர்தல் ஆணையம் வாக்காளர்களுடன் அப்போதும் இருந்தது, இப்போதும் இருக்கிறது. எப்போதும் இருக்கும்'' என்ற உறுதிமொழியை நம்புவதுதான் நல்லது.

## ரசிகர்களுக்கு மகிழ்ச்சி அனுபவம் நிச்சயம் - தனுஷ் நம்பிக்கை



'நிலவுக்கு என்மேல் என்னடி கோபம்' படம் தொடர்பாக வீடியோ ஒன்றை வெளியிட்டு தனுஷ் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இன்று உலகமெங்கும் தனுஷ் தயாரித்து இயக்கியுள்ள 'நிலவுக்கு என்மேல் என்னடி கோபம்' வெளியாகியுள்ளது. இந்த வெளியீட்டை முன்னிட்டு தனுஷ் வீடியோ பதிவொன்றை வெளியிட்டுள்ளார். அதில் "'ராயன்' படத்துக்குப் பின் நான் இயக்கியுள்ள படம் 'நிலவுக்கு என்மேல் என்னடி கோபம்' வெளியாகியுள்ளது. இப்படத்தினை எடுக்கும்போது எந்தளவுக்கு ஜாலியாக எடுத்தோமோ, அதைப் பார்க்கும்போது நீங்களும் சந்தோஷப்படுவீர்கள் என நம்புகிறேன். இப்படத்தில் நடித்துள்ள இளைஞர்கள் அனைவரும் அவர்களுடைய எதிர்காலத்தை நோக்கி, கண்ணில் பல கனவுகளுடன் காத்திருக்கிறார்கள். அந்த கனவுகள் அனைத்தும் நிறைவேற கடவுளை வேண்டிக் கொள்கிறேன். அந்த தருணத்தில் இருந்திருப்பதால், அந்த உணர்வு எப்படிப்பட்டது என தெரியும். அனைவருக்கும் வாழ்த்துகள்'' என்று தெரிவித்துள்ளார் தனுஷ். 'நிலவுக்கு என்மேல் என்னடி கோபம்' படத்தினை தமிழகத்தில் ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதில் பாவிஷ், அனிகா சுரேந்திரன், ப்ரியா பிரகாஷ் வாரியர், மேத்யூ தாமஸ், வெங்கடேஷ் மேனன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இதற்கு ஒளிப்பதிவாளராக லியோ பிரிட்டோம், இசையமைப்பாளராக ஜி.வி. பிரகாஷ் ஆகியோர் பணிபுரிந்துள்ளனர்.

## டிராகன் Review: பிரதீப் ரங்கநாதனின் பக்கா என்டர்டெயினர்!

'ஓ மை கடவுளே' என்ற ஃபான்டஸி காதல் கதைக்குப் பிறகு அஸ்வத் மாரிமுத்துவும், 'லவ் டுடே' கொடுத்த பிரம்மாண்ட வெற்றிக்குப் பிறகு பிரதீப் ரங்கநாதனும் இணைந்து களம் கண்டுள்ள படம் 'டிராகன்'. படத்தின் ட்ரெய்லர் வெளியானபோது இது சிவகார்த்திகேயனின் 'டான்' படத்தின் அடுத்த பாகம் என்ற கிண்டல்கள் எழுந்தன. ஆனால், அதையெல்லாம் தவிடுபொடியாக்கி ஒரு 'பக்கா' பொழுதுபோக்கு படமாக வந்துள்ளது 'டிராகன்'



கல்லூரியில் 'டிராகன்' என்ற பெயரில் அட்டகாசம் செய்யும் டி.ராகவன் (பிரதீப் ரங்கநாதன்), கல்லூரி முதல்வருடன் (மிஷ்கின்) ஏற்படும் பிரச்சினையால் 43 அரியர்களுடன் கல்லூரியை விட்டு பாதியிலேயே வெளியேறுகிறார். 2 ஆண்டுகளுக்குப் பிறகு வேலை வெட்டி எதுவும் செய்யாமல் நண்பர்களிடம் பணம் வாங்கி பெற்றோரை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார். அவரின் இந்த ஊதாரித்தனத்தால் அவரது காதலி (அனுபாமா பரமேஸ்வரன்) பிரேக்கப் செய்து வேறு ஒருவரை திருமணம் செய்து கொள்கிறார். முன்னாள் காதலியால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை போக்கி வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டுமென குறுக்கு வழியை தேர்ந்தெடுத்து போலி டிகிரி மூலம் ஒரு பெரிய நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்து கைநிறைய சம்பாதிக்கிறார். இதனையடுத்து அவருக்கு பெரிய தொழிலதிபரின் (கே.எஸ்.ரவிக்குமார்) மகளை (கயாடு லோஹர்) திருமணம் செய்வதற்கான வரன் தேடி வருகிறது. வாழ்க்கை நன்றாக சென்று கொண்டிருக்கும் வேளையில் திடீரென சிக்கல் ஒன்று முளைக்கிறது. அதிலிருந்து ஹீரோ வெளியே வந்தாரா என்பதை குதூகலமாகவும், உணர்வுபூர்வமாகவும் சொல்லியிருக்கிறது 'டிராகன்'. இந்தப் படத்தின் கதையை மேலோட்டமாக படித்தால் சிவகார்த்திகேயனின் 'டான்' நம் மனக்கண்ணில் நிழலாடும். படத்தின் முதல் 30 நிமிடங்களே கூட சில 'கிரிஞ்சு' ரக காட்சிகளால் அந்த சந்தேகத்தை மேலும் அதிகமாக்கியது. ஆனால், கல்லூரி பகுதியில் கதாபாத்திர அறிமுகங்கள் முடிந்து மெயின் கதைக்குள் படம் நுழைந்தது முதல் டாப் கியரில் செல்கிறது. அதன் பிறகு எங்கும் நிற்கவே இல்லை. நகைச்சுவை, எமோஷனல், கலகலப்பு என ஒரு ரகளையான ரோலர்கோஸ்டர் போல படம் செல்கிறது. படத்தின் பலமே அதன் கதாபாத்திர வடிவமைப்புகள்தான். தேவையில்லாமல் எந்தவொரு திணிப்புகளும் இல்லாமல் ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் நம் மனதில் ஆழமாக பதியும்படி எழுதியுள்ளார் இயக்குநர் அஸ்வத். பொதுவாக இது போன்ற கதைகளில் திரைக்கதைக்கு தொடர்பே இல்லாத ரொமான்ஸ் காட்சிகள், பாடல்கள் என நேரத்தை ஓட்ட இடம்பெறச் செய்வது வழக்கம். திரைக்கதை ஓரளவு நன்றாக இருந்தாலே அது ரசிகர்களுக்கு ஒரு குறையாக தெரியாது. ஆனால் அதற்கான பல சந்தர்ப்பங்கள் இருந்தும் அவற்றை தவிர்த்தற்காகவே இயக்குநரை மனதார பாராட்டலாம். படத்தில் பல உணர்வுபூர்வ தருணங்களும், நல்ல நகைச்சுவை காட்சிகளும் உண்டு. குறிப்பாக பிரதீப் ரங்கநாதனின் பெற்றோர் தொடர்பான காட்சிகள், அனுபாமாவின் பிரேக்கப்பும் அதைத் தொடர்ந்த காட்சிகளும் அழுத்தமாக எழுதப்பட்டுள்ளன. அதேபோல பிரதீப் ரங்கநாதன், கவுதம் மேனனுடன் ஆன்லைன் இன்டர்வியூவில் கலந்து கொள்ளும் காட்சி உள்ளிட்ட சிரிப்புக்கு உத்தரவாதம் தரும் காட்சிகளும் குறிப்பிடத்தக்கவை. ஹீரோவாக பிரதீப்புக்கு இது இரண்டாவது படம். முந்தைய படத்தில் இருந்த 'தனுஷ்' பாணி நடிப்புக்கு குட்-பை சொல்லிவிட்டு இதில் முடிந்தவரை தனக்கென ஒரு பாணியை உருவாக்கியுள்ளார். குறிப்பாக எமோஷனல் காட்சிகளில் ஸ்கோர் செய்கிறார். படத்தில் ஹீரோவுக்கு அடுத்ததாக பார்வையாளர்களின் பாராட்டை பெறுபவர் இயக்குநர் மிஷ்கின். ஏற்கெனவே பல படங்களில் அவர் நடித்திருந்தாலும் இது அவருக்கு பேர் சொல்லும் படமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அனுபாமா பரமேஸ்வரன் முதல் பாதியில் சிறிது நேரமே வந்து ஏமாற்றினாலும், இரண்டாம் பாதியில் அவருக்கு ஓர் அழுத்தமான பாத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதை அவரும் சிறப்பாக கையாண்டிருக்கிறார். மற்றொரு நாயகி கயாடு லோஹர். அனுபாமாவை விட முக்கியத்துவம் குறைந்த கேரக்டர்தான் இவருக்கு என்றாலும், குறையில்லாத நடிப்பை வழங்கியிருக்கிறார். பொதுவாக கமர்ஷியல் படங்களில் சோஷியல் மீடியா வேல்யூவுக்காக யூடியூப் பிரபலங்களை உப்புக்கு சப்பாணியாக நடிக்க வைப்பதுண்டு. ஆனால் அப்படி இல்லாமல் இதில் விஜே சித்து, ஹர்ஷத் கான் இருவருக்குமே நல்ல கதாபாத்திரத்தை கொடுத்திருக்கிறார் இயக்குநர். இரண்டாம் பாதியில் ஹர்ஷத் கான் செய்யும் அலப்பறைகள் ரசிக்க வைக்கின்றன. ஹீரோவின் தந்தையாக வரும் ஜார்ஜ் மரியான் வழக்கம்போல தனது கச்சிதமான நடிப்பை தந்திருக்கிறார். கவுதம் மேனன், கே.எஸ்.ரவிக்குமார் இருவரும் சில இடங்களில் வந்தாலும் ரசிக்க வைக்கிறார்கள். கமர்ஷியல் படம் என்பதாக இரைச்சலை வாரி இறைக்காமல் காதுக்கு ரம்மியமான பின்னணி இசையையும், பாடல்களையும் கொடுத்திருக்கிறார் லியோன் ஜேம்ஸ். நிகேத் பொம்மியின் கேமரா வழியே காட்சிகள் கலர்ஃபுல் ஆகியிருக்கின்றன. இரண்டாம் பாதியில் சில இடங்களில் தொய்வு, கல்லூரி சண்டை காட்சி, ஒரே பாடலில் ஓஹோவென வாழ்க்கை மாறுவது உள்ளிட்ட சில குறைகள் இருந்தாலும் க்ளைமாக்ஸில் சொல்லப்படும் நீதி பார்ப்பவர்களை நிச்சயம் கண்கலங்க வைத்துவிடும். கல்லூரியின் ரவுடித்தனம் செய்வது ஹீரோயிசம், அரியர் வைப்பது மாஸ் என மற்ற படங்களைப் போல நியாயப்படுத்தாமல் கல்விதான் நம்மை எப்போதும் உயர்த்தும் என்பதையும், நாம் செய்யும் ஒரு சிறு சிறு விஷயங்கள், அது நல்லதோ கெட்டதோ, பிறரது வாழ்க்கையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை '2கே தலைமுறையினரும்' புரிந்து கொள்ளும் வகையில் அழுத்தமாகவும், பொழுதுபோக்கு அம்சங்களுடனும் சொன்ன வகையில் அஸ்வத் மாரிமுத்தும், பிரதீப் ரங்கநாதனும் ஜெயித்திருக்கின்றனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066